**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.198/2023**

| Deposition of Name | லதா | Prosecution | PW.2 Cross |
|---|---|---|---|
| Father Name | க/பெ. பாஸ்கரன் | Defence | |
| Village | காளி | Taluk | மயிலாடுதுறை |
| District | மயிலாடுதுறை | Age | 49/2025 |

Solemnly affirmed by Tmt.R. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day **18.02.2026**

**எதிரிகள் ஆஜரில்லை குவிமுச.317 படி மனு அனுமதிக்கப்பட்டது.**

**குறுக்கு விசாரணை**

என் மகளுக்கும் முதல் எதிரிக்கும் திருமணம் ஆகி 63 நாட்கள் வாழ்ந்தார்கள் என்றால் சரிதான். திருமண தேதி என்ன என்றால் 30.08.2022. இறுதியாக என் மகள் என் வீட்டிற்கு கடைசியாக 04.11.2022 ம் தேதி வந்தார் என்றால் சரிதான். அதற்கு முன்பு தலை தீபாவளிக்கு வந்தார். 04.11.2022 ம் தேதி அன்று ஒரு விசேசத்திற்காக நாங்கள் வந்தோம். அப்போது என் மகளை என் வீட்டிற்கு அழைத்து சென்று 10 நாட்கள் வைத்திருந்து அனுப்பி வையுங்கள் என்று எதிரிகள் தரப்பினர் சொன்னார்கள். எதிரியின் வீடு புளியந்தோப்பு தெரு என்றால் சரிதான். புளியந்தோப்பு தெருவில் நெறுக்கமாக வீடுகள் உள்ளதா என்றால் சுமார் 20 வீடுகள் இருக்கும்.

மகளை அழைத்து வந்து எதிரிகள் வீட்டில் விடுவதற்காக வந்த போது ரஞ்சித் வீட்டில் இல்லை என்றால் சரிதான். தகறாறு நடந்து எவ்வளவு நேரம் கழித்து ரஞ்சித் வந்தார் என்றால் அரை மணி நேரம் கழித்து வந்து என் மகளை அழைத்து செல்லுமாறு கூறினார். தகறாரின் போது என் மகளுக்கு 2 விரல்களில் காயம், நாத்தனார் கடித்ததில் கையில் காயம், கட்டையால் அடித்ததில் 2 முழுங்காலிலும்

காயம், ஏற்பட்டது என்றால் சரிதான். என் மகளை என் மருமகனுடன் சேர்ந்து வாழ வேண்டி தாம்பத்திய மீட்டழைப்பு வழக்கு போட்டோமா என்றால் இல்லை. சேர்த்து வாழ வேண்டி பேச்சி வார்ததை நடத்தினோமா என்றால் சீர்காழி மணி மண்டபத்தில் நவம்பர் மாதம் நடத்தினோம். அதன் பிறகு சட்டநாதபுரத்தில் வாடகை வீடு எடுத்து என் மகளும் மருமகனும் குடும்பம் நடத்தினர். எத்தனை நாட்கள் குடும்பம் நடத்தினார்கள் என்றால் சுமார் 1 மாதம் குடும்பம் நடத்தினர். தகறாரின் போது எதிரிகளுக்கு காயம் ஏற்பட்டதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஆனால் அவர்கள் 108 ஆம்புலன்ஸ் யில் வந்தார்கள். அதே சம்பவத்தில் நான், பவித்ரா, மனோஜ் ஆகியோர் மீது போலிசார் வழக்கு பதிவு செய்து நாங்கள் ஜாமீனில் வந்தோம் என்றால் சரிதான். அந்த வழக்கும் சமூக நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்று வருகிறது.

மேற்படி சம்பவத்தின் போது சுமார் 100 பேர் 100 நாள் வேலை செய்து கொண்டிருந்தார்கள் என்றால் சரிதான். அப்போது அங்கு வந்து சண்டையை விலக்கி விட்டார்கள். என்னை எதிரிகள் ஆளுக்கொரு கட்டையால் என் உடம்பு முழுவதும் தாக்கினார்கள். மேலும் உடல் முழுவதும் வீக்கம் ஏற்பட்டது மேலும் சீர்காழீ அரசு மருத்துவ மனையில் சிகிச்சை அளித்து மேல் சிகிச்சைக்கு சிதம்பரம் மருத்துவ மனைக்கு செல்லுமாறு அறிவுறுத்தினார்கள். நாங்கள் மயிலாடுதுறை GHயில் உள் நோயாளியாக 3 நாட்கள் நானும் என் மகளும் சிகிச்சையில் இருந்தோம். குடும்ப வன்முறை சட்டப்படி எதிரிகள் மீது மயிலாடுதுறை குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்கு போட்டுள்ளோம் என்றால் சரிதான்.

என் மருமகன் ரஞ்சித் விவாகரத்து வேண்டும் என்று சீர்காழி சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார் என்றால் சரிதான். மயிலாடுதுறை குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்த பிறகு சீர் ஜாமான்கள் இரு தரப்பு வழக்கறிஞர் மூலம் பேசி பெற்றுக்கொண்டோம் என்றால் பாதி அளவு பெற்றுக்கொண்டாம். நானும் என் மகளும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற போது 5 நபர்கள் கட்டையால்

தாக்கியதாக கூறினேன் என்றால் சரிதான். நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் நாங்கள் தான் 5 பேர் மூலம் எதிரிகளை தாக்கினோம் என்றால் சரியல்ல. அந்த வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக பொய் வழக்கு தொடர்ந்துள்ளோம் என்றால் சரியல்ல. திட்டைக்கும் காளிக்கும் சுமார் 30 கி.மீ தூரம் இருக்கும் என்றால் இருக்கலாம்.

என் மருமகனுடன் என் மகளே வாழ முடியாது என்று சொல்லி வந்துவிட்டார் என்றாலும் அதனால் அவர்கள் மீது பொய் வழக்கு போட்டுள்ளோம் என்றாலும் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.**

**மறு விசாரணை இல்லை.**